**த. நா.ச.பே. எண் : 020** **நாள் : 30.08.2016**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 30.8.2016

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலத்துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதால் இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்படாத நிகழ்வுகளில், அச்சிறார்களைத் தற்காலிகமாக தங்க வைக்கும் பொருட்டு, கூர்நோக்கு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது அரசால் 6 கூர்நோக்கு இல்லங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் 1 கூர்நோக்கு இல்லமும் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னை கெல்லீஸ் சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்ல கட்டடம் பழுதடைந்துள்ள காரணத்தினால் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளையும் கொண்ட 1,000 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும். இக்கட்டடத்தில் தங்கும் அறைகள், சமையலறையுடன் கூடிய உணவு அருந்தும் கூடம், தொழிற்பயிற்சிக் கூடம் மற்றும் வகுப்பறைகள் உள்ளிட்ட சிறார்களை நல்வழிப்படுத்துவதற்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் இருக்கும்.

2. மாநில அரசு நிதி உதவியுடன் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பயனடையும் முதியோர்களுக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியம் 300/– ரூபாயிலிருந்து 1200/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

3. சமூக நலத் துறையின் கீழ், சென்னை, கடலூர், தஞ்சாவூர், சேலம், சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி, பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சேவை இல்லங்களில் தங்க ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று, இடை நிலை ஆசிரியைப் பயிற்சிக்கான மாணவியர் சேர்க்கை மற்றும் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களிலும் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 24,000/– ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 24,000/– ரூபாயிலிருந்து 72,000/–ரூபாயாக உயர்த்தப்படும். இதன் காரணமாக இத்திட்டங்களினால் அதிக பயனாளிகள் பயனடைவர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**